வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்
ந.க.எண். 1403 /ஆ2/2023 . நாள் : 28.03.2023.

பொருள்: பள்ளிக் கல்வி – வேலூர் மாவட்டம்– தினத்தந்தி மற்றும் VIT பல்கலைக்கழகம் இணைந்து நடத்தும் – வெற்றி நிச்சயம் 2023 – வழிகாட்டுதல் நிகழ்ச்சி 11.04.2023 (செவ்வாய்க்கிழமை) அன்று நடைபெறவுள்ளது – அரசு/அரசு உதவி பெறும் மற்றும் தனியார் பள்ளி – 10, 11, மற்றும் 12–ஆம் வகுப்பு மாணவ/மாணவிகளை பங்குபெறச் செய்யும் வகையில் தலைமை ஆசிரியர்களுக்கு அறிவுறுத்துதல் – தொடர்பாக.

பார்வை: வேலூர் மாவட்ட தினத்தந்தி அலுவலக மேலாளரின் கடிதம் நாள். 27.03.2023.

பார்வையில் காணும் கடிதத்தின்படி வேலூர் மாவட்டத்திலுள்ள அரசு/அரசு உதவி பெறும் மற்றும் தனியார் பள்ளிகளில் 10, 11, மற்றும் 12–ஆம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கு தினத்தந்தி மற்றும் VIT பல்கலைக்கழகம் இணைந்து நடத்தும் வெற்றி நிச்சயம் 11.04.2023 (செவ்வாய்க்கிழமை) அன்று காலை 9.15 மணி முதல் மாலை 5.00 மணி வரை VIT பல்கலைக்கழக வளாகத்தில் நடைபெறவுள்ளது.

மேலும் கிராம புற மாணவ, மாணவிகளும் பயன் பெறும் வகையில் இந்த ஆண்டு கூடுதலாக குடியாத்தம் KMG கல்வி நிறுவனத்துடன் இணைந்து 06.05.2023–ஆம் தேதி சனிக்கிழமை காலை 9.15 மணி முதல் மாலை 5.00 மணி வரை KMG கல்வி நிறுவன வளாகத்திலும் நிகழ்ச்சி நடைபெறவுள்ளது

மேற்கண்ட நிகழ்ச்சியில் கலந்து கொள்ளும் பொருட்டு மாணவ / மாணவியர்களின் எண்ணிக்கையினைக் கருத்தில் கொண்டு போதிய ஆசிரியர்களை நியமனம் செய்து மாணவர்களை பாதுகாப்பாக அழைத்துச் சென்று பயன்பெற உரிய நடவடிக்கை மேற்கொள்ள அனைத்து வகை உயர் / மேல் நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

<u>நிபந்தனைகள்</u>

1. மாணவர்களின் விருப்பத்தின் அடிப்படையில் மட்டுமே வெற்றி நிச்சயம் வழிகாட்டுதல் நிகழ்ச்சயில் கலந்து கொள்ள வேண்டும்.
2. வெற்றி நிச்சயம் நிகழ்ச்சியில் கலந்து கொள்ளும் மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப ஆசிரியர்கள் உடன் செல்ல வேண்டும்.
3. மாணவர்களிடம் எவ்வித கட்டணத் தொகையும் பெறக் கூடாது. அனுமதி இலவசம்.
4. மாணவர்களின் பெற்றோர்களிடம் சம்மதக் கடிதம் பெற வேண்டும்.

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர்
1. தலைமையாசிரியர்கள் / முதல்வர்கள், அனைத்து வகை உயர்/மேல்நிலைப் பள்ளிகள், வே.மா.
2. மாவட்டக் கல்வி அலுவலர், (இடைநிலை)/(தனியார் பள்ளிகள்) வேலூர் மாவட்டம்.

நகல் மேலாளர், தினத்தந்தி அலுவலகம்,
35, ஆற்காடு சாலை, வேலூர்–04. (தகவலுக்காக)

//ப.த.//